**தலைப்பு 255 - கொழும்பு மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 255 - கொழும்பு மாவட்டச் செயலகம் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 14 ஆம் திகதி மாவட்ட செயலாளர்க்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,692.00 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,358.21 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 334.79 மில்லியன் அதாவது 19.79 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 738.00 | 722.42 | 15.58 | 2.11 |
| மூலதனம் | 954.00 | 635.79 | 318.21 | 33.36 |
| மொத்தம் | 1,692.00 | 1,358.21 | 334.79 | 19.79 |

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

மாவட்ட செயலகத்திற்கு பல்வேறு செயற்பாடுகளுக்காக 23 அமைச்சுக்கள் மற்றும் 20 திணைக்களங்களினால் ரூபா 3,361 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 3,358 மில்லியன் தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 3 மில்லியன் தொகை அல்லது 0.08 சதவீதம் சேமிப்புக்களாகக் காணப்பட்டது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 25501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 47.00 | 46.85 | 34.00 | 42.68 | 210.00 | 154.59 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் 08 வைப்பு கணக்குகளின் மீதிகள் ரூபா 580.40 மில்லியன் கூட்டுத்தொகையாகவிருந்தது. விபரங்கள் கீழ் வருமாறு.

| வைப்பு கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன்கள் |
| 6000-0000-00-0002-0075-000 | 0.34 |
| 6000-0000-00-0001-0057-000 | 1.74 |
| 6000-0000-00-0017-0006-000 | 239.75 |
| 6000-0000-00-0013-0046-000 | 70.44 |
| 6000-0000-00-0016-0026-000 | 252.46 |
| 6000-0000-00-0018-0061-000 | 6.08 |
| 6000-0000-00-0019-0011-000 | 4.11 |
| 6000-0000-00-0001-0000-000 | 5.48 |
| மொத்தம் | 580.40 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

மாவட்ட செயலகம், கொழும்பின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | மின் உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (ஈ) | வாகனப் பதிவுப் புத்தகங்கள் | நிதிப்பிரமாணம் 1645(அ) |
| (உ) | மோட்டார் வாகனங்களின் பட்டியல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |
| (ஊ) | விலைமனு அழைப்பிதழ் பதிவேடு | அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 5.2.1 ஆம் வழிகாட்டி |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 22 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்ட 11 மற்றும் 19 ஆம் செலவின விடயங்களுக்கு நிதிப்பிரமாணங்கள் 66 மற்றும் 69 இன் பிரகாரம் சேர்ப்பனவுகள் மற்றும் கழிப்பனவுகளாக ரூபா 55,138,500 மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒரு செலவின விடயத்திற்கு குறைநிறப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகளினூடாக ரூபா 17,000,000 தொகையொன்று பெறப்பட்டிருந்தமையினால், தேவையான நிதி ஏற்பாடுகளுக்கான முன் கணிப்பு மற்றும் மதிப்பீடுகளினை

மேற்கொள்ளல் என்பன துல்லியமாக மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம், 6003/0000/00/0001/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் மீதி காணப்படவில்லை. ஆனால் திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 10,000,000 தொகையான வரவு மீதியொன்று காணப்பட்டது. திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய இந்த வரவு மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு மாவட்ட செயலகத்தினால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும், அவற்றிக்கு புலனாய்வுகளினை மேற்கொள்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு 2017 சனவரி 26 இல் நடாத்தப்பட்ட பொதுக் கணக்குகள் குழுவினால் நிதியமைச்சின் செயலாளர் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் வழிநடாத்தப்பட்டிருந்ததுடன், இது வரை அந்தக் குழுவினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

25501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 4,633,206 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 277,353 தொகையொன்று 2017 யூன் 30 வரையிலும் அறவிடப்பட்டிருந்தமையினால் ரூபா 4,355,853 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டது. இருந்த போதிலும், 01 மாதம் தொடக்கம் 20 வருடங்கள் வரையான வீச்சிலான காலப்பகுதியொன்றுக்கு அந்தக் கடன் மீதிகள் தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அந்தக் கடன் மீதிகளினைக் அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடவேண்டிய ரூபா 4,633,206 மொத்தக் கடன் மீதியில், 1997 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை இடைநிறுத்தப்பட்ட 20 உத்தியோகத்தர்களின் மீதிகள் ரூபா 2,842,745 தொகையான கடன் மீதிகளாகக் காணப்பட்டது. மேலும், மொத்தக் கடன் மீதி நிலுவைகளில், ரூபா 3,026,802 கடன் மீதியொன்று 05 வருடங்களுக்கு மேலாக நிலுவையொன்றாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அது மொத்த நிலுவை கடன் மீதியில் 65 சதவீதமாகக் காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 154,585 கடன் மீதிகள் மிகையாக அறவிடப்பட்டிருந்ததுடன் மிகையாக அறவிட்ட பணத்தை மீளச் செலுத்துவதற்கு மற்றும் கடன்களின் மீள் செலுத்துகை தொடர்பில் பதிவுகளினை திருத்துவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

2013 சனவரி 23 ஆம் திகதிய, SA/AS/AA/Circular ஆம் இலக்க அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைகளத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு விலாசமிடப்பட்ட பொது கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை கடிதத்தின் உறுப்புரைகளின் பிரகாரம் அட்டுறு அடிப்படை தொடர்பாக தயாரிக்கப்பட்ட கணக்குகள், 2016 ஏப்ரல் 30 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வெளித்தரப்பினர்க்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

மஹரகம பிரதேச செயலகத்தின் பழைய அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம், 05 வருடங்களுக்கு மேலாக மஹரகம விவசாய சேவைகள் குழுவிற்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) கையளிக்கப்படாத சொத்துக்களின் முறையற்ற பயன்பாடு**

காணியின் முறையான கையளித்தலின்றி இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான காணியொன்றில் செயலகத்திற்கு, மஹரகம பிரதேச செயலகம் புதியதொரு கட்டிடத்தினை நிர்மாணித்திருந்தது.

**(இ) வாகனப் பராமரிப்பு**

எரிபொருளின் முறையற்ற பாவனையை தவிர்ப்பிற்கு மற்றும் வெளிப்படையான தன்மையுடன் பயன்படுத்துவதற்கு 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை பரீட்சிப்பதற்கு 2016 திசெம்பர் 29 இன் 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையினால் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், கடுவெல, ஹன்வெல, மொறட்டுவ மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலகங்களின் வாகனங்களுக்கு அவ்வாறானதொரு பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.7 தீர்ப்பனவு செய்யப்படாத பொறுப்புக்கள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 01 வருடத்தை விடக்குறைந்த மாவட்ட செயலகத்தின் தீர்ப்பனவு செய்யப்படாத பொறுப்புக்கள் ரூபா 745,578 கூட்டுத்தொகையாகக் காணப்பட்டது. இருந்த போதிலும், 06 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 112,773 சேமிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 599,040 தொகையொன்றினால் அந்த சேமிப்புக்களினை மிகைத்து ரூபா 711,813 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**3.8 உள்ளூர் நிதியளிப்பின் கீழ் செயற்திட்டங்களின் அமுல்படுத்தல்**

**(ஆ) ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது கொழும்பு, திம்பிரிகஸ்யாய, ஸ்ரீ ஜெவர்த்தனபுர கோட்டை, ரத்மலான மற்றும் மொறட்டுவ பிரதேச செயலகங்களினால் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 4,172,460 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய 13 செயற்திட்டங்கள், திட்டமிடலிலுள்ள பலவீனங்கள், பிரதேச செயலகங்களின் குறைந்தளவிலான மேற்பார்வை, ஒப்பந்ததாரர்களினால் அறிவிக்கப்பட்ட காலம் போதாமை மற்றும் விலை மனுதாரர்கள் சமூகமளிக்காமை போன்ற காரணங்கள் காரணமாக ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன. அந்த 13 செயற்திட்டங்களின் பிரதேச செயலகங்களுக்கு மாவட்ட செயலகத்தினால் ரூபா 3,922,580 ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்தது.

**3.9 செயலாற்றல்**

(அ) 2016 ஆம் ஆண்டில் கடுவெல, பிரதேச செயலகத்தின் பரவலாக்கப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் மூலதன செயற்திட்டங்களின் அமுல்படுத்தலின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(i) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

கடுவெல பிரதேச செயலக பிரதேத்தில் 57 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றதுடன் மூலதன செயற்திட்டங்களினை அமுல்படுத்துவதற்கு அந்த பிரிவுகளுக்காக பரவலாக்கப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 38,675,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நேரடியாக ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்கள் 09 கிராம சேவையாளர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 44 கிராமசேவையாளர் பிரிவுகளில் 01 தொடக்கம் 07 வரையான வீச்சில் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்த அதேவேளை 04 கிராம சேவையாளர் பிரிவுகளில் முறையே 09,14,18,19 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பரவலாக்கப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகளினூடான அபிவிருத்தி செயற்பாடுகளின் அமுல்படுத்தல்களில் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டதுடன் பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்கின்ற மக்களிடையே அந்த நலன்கள் நியாயமாக பகிர்ந்தழிக்கப்பட்டிருக்காமை கூட அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பழைய நலன்டியன் ஆசிரியர்கள் கிராமத்தின் கழிவகற்றல் முறைமையின் நிர்மாணம் (ரூபா 800,000)**

---

பழைய நலன்டியன் ஆசிரியர்கள் கிராமத்தின் கழிவகற்றல் முறைமையின் நிர்மாணிப்பு செயற்திட்டம் வினைத்திறனான செயற்திட்டமொன்றாக இருக்காது என செயற்திட்டத்தின் ஆரம்பிப்புக்கு முன்னர், கடுவெல பிரதேச செயலகம் அறிவித்திருந்தது. இந்த போதிலும், கொழும்பு மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தில், மேற்குறித்த செயற்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 800,000 ஏற்பாடுகளில் ரூபா 776,682 தொகையொன்று நேரிட்டதன் மூலம் மீளாய்வாண்டில் அது பூர்த்தியாக்கப்பட்டதுடன், இது வரையில் மேற்குறித்த அந்த கழிவகற்றல் முறைமை பயன்படுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

**அரச பெறுகைகள் வழிகாட்டல்கள் செயல்முறைகளிலிருந்தான விலகல்**

---

கடுவெல, பிரதேச செயலகத்தின் பெறுகைகள் செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச பெறுகை வழிகாட்டல்களின் 3.2 ஆம் வழிகாட்டிலிற்கிணங்க செயற்திட்டங்களுக்கான அனைத்து பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து விலை மனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரச பெறுகை வழிகாட்டல்களின் 2.6.1 ஆம் வழிகாட்டலின் ஏற்பாடுகளின் உறுப்புரைகளுக்கமைய தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கையில் உயர் விலைகளினை கோரிய விநியோகத்தர்களின் தெரிவுக்கு மற்றும் தாழ்ந்த விலைகளினை கோரிய விநியோகத்தர்களின் நிராகரிப்புக்கான காணரங்கள் தனித்தனியாக விபரிக்கப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் முறையான தனித்தனி தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3.11 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 93,227,459 தொகையான 05 வருடங்களுக்கு குறைந்த மற்றும் ரூபா 146,016 தொகையான 5 தொடக்கம் 10 வருடங்களுக்கிடைப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்களுடன் தொடர்புடைய 10 சம்பவங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 05 வரையிலும் ரூபா 93,346,613 தொகையான நட்டங்கள் மற்றும் சேதங்களினை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.12 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) 2012 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாவட்ட செயலகம், கொழும்பு பரப்புக்குச் சொந்தமான 13 பிரதேச செயலகங்களின் ஓய்வூதியங்களின் செலுத்துகைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 13 பிரதேச செயலகங்களினால் 2012 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை ஓய்வூதியங்களின் செலுத்துகைகளில், 2017 யூன் 30 வரை ரூபா 13,117,482 கூட்டுத்தொகையான தொகைகள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| விபரங்கள் | ஓய்வூதியங்களின் செலுத்துகை (ரூபா.) |
|---|---|
| விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியங்கள் | 5,170,737 |
| சிவில் ஓய்வூதியங்கள் | 7,683,090 |
| இராணுவ உத்தியோகத்தர்களின் ஓய்வூதியங்கள் | 263,655 |
| மொத்தம் | 13,117,482 |

(ii) விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியங்கள், சிவில் ஓய்வூதியங்கள் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்களின் ஓய்வூதியங்களின் மொத்த பெறுமதி மிகையாகச் செலுத்தப்பட்டதுடன் ரூபா 13,117,482 தொகையினை 2017 யூன் 30 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றின் மீதான வயதுப் பகுப்பாய்வு கீழே காட்டப்படுகின்றன.

| | பெறுமதி (ரூபா.) |
|---|---|
| 01 வருடத்தை விட குறைந்தவை | 7,622,799 |
| 01-05 வருடங்களுக்கு இடைப்பட்டவை | 4,191,080 |
| 05 வருடங்களுக்கு மேலதிகமானவை | 990,389 |
| அறவிடமுடியாத நட்டங்கள் | 313,214 |
| மொத்தப் பெறுமதி | 13,117,482 |

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது 10 பிரதேச செயலகங்கள் தொடர்பில் ஓய்வூதிய பிரிவுகளினால் ஓய்வூதியதார்களின் இறப்பிற்குப் பின்னர் செலுத்தப்பட்ட ரூபா 6,092,261 பெறுமதியான ஓய்வூதியங்களை அறவிடுவதற்கு 2017 யூன் 30 வரையேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றின் பின்னர் பெற்றுக்கொண்ட அறிவினைப் பயன்படுத்துவதன் மீதான பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு முறைமையொன்றினை கடுவெல, பிரதேச செயலகம் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையேனும் ரூபா 1,200,000 தொகையொன்று நேரிட்டதன் மூலம் நடாத்தப்பட்ட பெண்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கு முறையானதொரு பின்தொடர் முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.13 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினதும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு காணப்பட்டன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 50 | 45 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 33 | 21 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,224 | 1,044 | 180 |
| (iv) | ஆரம்ப நிலை | 137 | 114 | 23 |
| | மொத்தம் | 1,444 | 1,224 | 220 |